**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 290**

**ආයතනයේ නම: දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මන්නාරම**

**පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයා ගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மன்னார்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No : 290**

**Name of the institution: District Secretariat, Mannar**

**Submission of observation of the hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

**இலங்கை பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பாக எடுக்கப்பட்ட அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு வழங்குதல்**

பாராளுமன்ற தொடர் இல : 290

நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மன்னார்

| இல | செயல்திறன் மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை. | உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்புவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 02 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்பங்கள் காணப்பட்டிருந்தன. | உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்புவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 03 | ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | அமைச்சின் செயலாளரிடம் இருந்து குறித்த வாகனத்தை காப்புறுதி சபைக்கு ஒப்படைக்க அனுமதி தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ளதனால் ஒப்படைக்கும் செயற்பாடு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. |
| 04 | 2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மாவட்ட செயலகங்களுக்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை. | 2020,2021,2022 ஆகிய ஆண்டுகளில் நாட்டின் Covid 19 பரவல் அதனை தொடர்ந்து வந்த எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நாட்டின் பொருளாதார பிரச்சினை போன்ற காரணங்களால் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை ஆயினும் 2023 ஆம் ஆண்டு முதல் 2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மாவட்ட செயலகங்களுக்கு சொந்தமான வாகனங்களுக்குரிய எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| 05 | வங்கி இணக்க கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்படவில்லை. | அலுவலர் ஒருவரின் காசோலை மோசடி காரணமாக இக்குறைபாடு ஏற்பட்டது. தற்போது நீதிவான் நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| 06 | நி.பி94(1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்த பின்னர் ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சியபடி பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது. | குறித்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மேற்படாத வகையில் அவ்வாண்டிற்கான பொறுப்புக்கள் காணப்பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பொறுப்புக்களில் மீதிகளுக்கு குறித்த ஆண்டில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவில்லை அதன் காரணமாக ஆண்டிறுதியில் காணப்பட்ட மொத்த பொறுப்புக்களானது குறித்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு மீதியிலும் அதிகமானதாக காணப்பட்டது. |
| 07 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்படவில்லை. | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட அலுவலர்களான திரு.R.செல்வலக்சன்(MSO) மற்றும் திரு.S.N.டெல்வின் குலாஸ்(G.N) ஆகியோரது கடன் நிலுவைத் தொகைகள் பகுதி பகுதியாக அறவிடப்பட்டு நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன. மேலும் திரு.M.S.மலீஸ் (Driver) கடன் நிலுவையானது அவரது பிணையாளரிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகின்றது. இளைப்பாறிய அலுவலர்களது கடன் நிலுவையானது அவர்களது ஓய்வூதிய கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதும் அதிலிருந்து கடன் நிலுவையானது முழுவதுமாக அறவிடப்படும். |
| 08 | காலாவதியான வைப்புக்ககள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உரிய காலத்திற்குள் நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 09 | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் 2008.02.06 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் முறையாக தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.<br>நிறுவனத்தின் பிரஜைகள் சேவை பெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் மதீப்பீடு செய்வதற்குமான முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் 2008.02.06 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் முறையாக தயாரிக்கப்பட்டு நிறுவனத்தின் பிரஜைகள் சேவை பெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் மதீப்பீடு செய்வதற்குமான முறையொன்றும் நடைமுறையில் உள்ளது. |

மாவட்டச் செயலாளர்

மாவட்டச் செயலகம்

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

பிரதம கணக்காளர்

மாவட்டச் செயலகம்

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.